வேளாண் ஏற்றுமதி ரூ.74,000 கோடியாக அதிகரிக்கும்
ஏப்ரல் 19,2011,00:02



புதுடில்லி: சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த வேளாண் பொருள்கள் ஏற்றுமதி 74 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.இதில், 'அபெடா' என்று சுருக்கமாக அழைக்கப்படும், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் வாயிலாக, மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி, 40 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என, இந்த ஆணையத்தின் தலைவர் அஜித் திரிபாதி தெரிவித்தார்.இது, கடந்த 2009-10ம் நிதியாண்டில், இவ்வமைப்பால் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 14 (35 ஆயிரம் கோடி ரூபாய்) சதவீதம் அதிகமாகும்.சென்ற நிதியாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 25 ஆயிரம் கோடி டாலராக (11.50 லட்சம் கோடி ரூபாய்) அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, கடந்த 2009-10ம் நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட 7,000 கோடி டாலர் ( 3 லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய்) அதிகமாகும்.

சென்ற பிப்ரவரி மாதத்தில் மட்டும், நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 2,360 கோடி டாலராக ( 1.09 லட்சம் கோடி ரூபாய்) இருந்தது. மேலும், சென்ற நிதியாண்டின், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில், மொத்த ஏற்றுமதி, முந்தைய ஆண்டின் இதே காலத்தை விட 31.4 சதவீதம் அதிகரித்து, 20 ஆயிரத்து 820 கோடி டாலராக (9.58 லட்சம் கோடி ரூபாய்)

அதிகரித்துள்ளது. இது, சென்ற முழு நிதியாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட, இலக்கான, 20 ஆயிரம் கோடி டாலரை (9.20 லட்சம் கோடி ரூபாய்) விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.அஜித் திரிபாதி, மேலும் கூறியதாவது:நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில், வேளாண் பொருள்கள் ஏற்றுமதி பங்களிப்பு 13 Œதவீதம் என்ற அளவில் உள்ளது.

'அபெடா' அமைப்பு, பூ வகைகள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி மற்றும் இறைச்சி பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், தானியங்கள் மற்றும் தானியங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள், மூலிகைகள் மற்றும் மூலிகை மருந்து பொருள்கள், கொத்தவரை உள்ளிட்ட 14 நான்கு வகை பொருள்களின் ஏற்றுமதியை, கண்காணித்து வருகிறது.பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களுக்கு, வெளிநாடுகளில் அதிகளவு தேவைப்பாடு உள்ளது. எனவே, இவற்றின் ஏற்றுமதி மேலும் அதிகரிக்க வேண்டுமானால், நாம் அதிகளவு முதலீடு மேற்கொள்ள வேண்டும்.

நடப்பு 2011-12ம் நிதியாண்டில், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி 20 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும்.சர்வதேச அளவில், வேளாண் பொருள்கள் ஏற்றுமதியில், இந்தியாவின் பங்களிப்பு 1.4 சதவீதம் என்ற அளவில் உள்ளது. சர்வதேச இறக்குமதியில், இந்தியாவின் பங்களிப்பு 1.2 சதவீதம் என்ற அளவில் உள்ளது. உலகளவில், வேளாண் பொருள்கள் ஏற்றுமதியில், ஐரோப்பிய குடியரசு நாடுகள், அமெரிக்கா, பிரேசில், கனடா மற்றும் சீனா ஆகியவை முன்னிலையில் உள்ளன. இவ்வாறு திரிபாதி கூறினார்.

**அதிக மகசூல் தரும் புதிய நெல் ரகங்கள் மத்திய நெல் ஆராய்ச்சி மையம் உருவாக்கம்**

ஏப்ரல் 19,2011,00:03



கட்டாக்: அதிகளவு மகசூல் தரும் இரண்டு புதிய நெல் வகைகளை, மத்திய நெல் ஆராய்ச்சி மையத்தை (சி.ஆர்.ஆர்.ஐ.) சார்ந்தவேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஒடிசாவின்

கட்டாக் நகரில், நாட்டின் மிகப் பெரிய மத்திய நெல் ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. இந்த மையம், கடந்த 64 ஆண்டுகளில் 82 வகையான புதிய நெல் வகைகளை உருவாக்கியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், 11 புதிய நெல் வகைகளை இந்த மையம் கண்டுபிடித்துள்ளது. அதில் 5 வகைகள், ஒடிசாவின் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப, பிரத்யேகமாக உருவாக்கப்பட்டவை என்று, இந்த மையத்தின் இயக்குனர் டி.கே. அத்யா தெரிவித்தார்.

இந்த புதிய நெல்வகைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயிரிடுவதற்கு, மத்திய மற்றும் மாநிலவேளாண் பயிரிடும் குழுக்கள் அனுமதி அளித்துள்ளன.இதன்படி, சி.ஆர்.ஆர்.ஐ. தன் நெல் வகைகளில், 401, 501, 701, 601 மற்றும் 'சி.ஆர்.போரோ தன் 2' ஆகிய நெல் வகைகளை தமிழகம், பீகார், குஜராத், அசாம்,மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் பயிர் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒடிசாவில் பயிர் செய்வதற்கு சி.ஆர். தன் 401, 402, 403, 801 மற்றும் 901 ஆகிய நெல் ரகங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நெல் ரகங்களை பயிரிடுவதன் மூலம், 150 முதல் 155 நாட்களில் ஒரு எக்டேருக்கு 4 டன் நெல் சாகுபடி செய்யலாம்.புதிய கண்டுபிடிப்பான சி.ஆர்.2301-5 மற்றும் சி.ஆர். 2285-6-6-3-1 என்ற இரு நெல் வகைகளும் அதிக மக‹ல் கொடுக்கக் கூடியவை என்பதுடன், உயர் தரமான அரிசியை வழங்கக் கூடியவை என்று வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**ஆத்தூர் வேளாண் விற்பனை சங்கத்தில் குவிந்த 25 ஆயிரம் பருத்தி மூட்டைகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,01:58 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 25 ஆயிரம் பருத்தி மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர். ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்று கிழமை பருத்தி ஏலம் நடந்து வருகிறது. ஏலத்துக்கு கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் ஆகிய பகுதி மற்றும் ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில் விளைவித்த பருத்தியை விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்கும் ஏலத்தில் தரமான பருத்தி கிடைப்பதால், வெளி மாவட்ட வியாபாரிகள் அதிகளவு ஏலத்தில் கலந்து கொண்டு கூடுதல் விலை கொடுத்து பருத்தி மூட்டைகளை வாங்கி செல்கின்றனர்.

அதனால், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்கும் பருத்தி ஏலத்தில் விவசாயிகள் பருத்தி மூட்டைகளை அதிகளவு கொண்டு வந்து விற்பனை

செய்கின்றனர். அதன்படி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்து வரும் பருத்தி ஏலத்தில் விலை ஏறுமுகத்தை நோக்கி சென்று டி.சி.ஹெச்.,

குவிண்டால் 8, 200 ரூபாயும், ஆர்.சி.ஹெச்., குவிண்டால் 6,600 ரூபாய்க்கு விற்றது. கடந்த 3ம் தேதி பருத்தி ஏலம் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், நேற்று நடந்த ஏலத்துக்கு வெளி மாவட்டம் மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் மினி சரக்கு ஆட்டோ, லாரி, டிராக்டர் ஆகியவற்றில் 25 ஆயிரம் பருத்தி மூட்டைகளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். "அதன்படி, 5 கோடி ரூபாய்க்கு மேல் வர்த்தகம் நடக்கும்' என, கூட்டுறவு வேளாண்மை அலுவலர்கள் தெரிவித்தனர்.

**குண்டுமல்லி விலை குறைவால் வாடும் மலர் விவசாயிகள் கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,01:47 IST

சேலம்: விளைச்சல் அதிகரித்ததால், குண்டு மல்லி கிலோ, 20 ரூபாய்க்கு வாங்க ஆளில்லாத நிலை ஏற்பட்டது. தமிழகத்தில், சேலம் பூ மார்க்கெட் முக்கிய இடத்தை வகிக்கிறது. சேலம் வ.உ.சி., பூ மார்க்கெட்டில், 500க்கும் அதிகமான கமிஷன் ஏஜன்ட்டுகள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதி விவசாயிகள், சேலம் பூ மார்க்கெட்டுக்கு மலர்களை கொண்டு வந்து, கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்கின்றனர்.

வாசமிக்க குண்டு மல்லி பூவுக்கு மக்களிடம் எப்பொழுதும் தனி மவுசு உண்டு. குண்டு மல்லி கடந்த சில மாதங்களுக்கு முன், கிலோ ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. சேலம் வீராணம், வலசையூர், பள்ளிப்பட்டி, வாழக்குட்டப்பட்டி, நரிக்கல்காடு, பனமரத்துப்பட்டி, மல்லூர் உள்ளிட்ட இடங்களில், குண்டு மல்லி பூவை பல ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். குண்டு மல்லி பூக்களுக்கு சித்திரை, வைகாசி மாதம் சீஸனாக உள்ளது. இந்த மாதங்களில் குண்டு மல்லி பூ உற்பத்தி அதிகளவு இருக்கும்.

சேலம் மார்க்கெட்டுக்கு சராசரியாக இரண்டு டன் குண்டு மல்லி வரத்து இருந்தது. நேற்று, சேலம் மார்க்கெட்டுக்கு, 20 டன் குண்டு மல்லி பூ வரத்து இருந்தது. இதில், 10 டன் குண்டு மல்லி சென்ட் ஃபேக்டரிக்கும், ஐந்து டன் பெங்களூருவுக்கும் அனுப்பப்பட்டது. உள்ளூர் மற்றும் விசேஷ தேவைக்கு ஒரு டன்னுக்கும் குறைவாகவே பூக்கள் விற்பனை செய்யப்படும். நேற்று ஒரே நாளில் ஐந்து டன் குண்டு மல்லி பூக்கள் தேக்கம் அடைந்ததால், குண்டுமல்லி பூ விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்தது. நேற்று காலை கிலோ, 20 ரூபாய்க்கு குண்டு மல்லி விற்பனை செய்யப்பட்டது. நேற்று மாலை 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டும், வாங்குவதற்கு ஆளில்லாத நிலை ஏற்பட்டது.

குண்டு மல்லி பூ பறிக்க கிலோவுக்கு, 25 ரூபாய் விவசாயிகள் அளிக்க வேண்டியுள்ளது. நேற்று கிலோ, 20க்கு விற்பனை செய்யப்பட்டதால், பூ பறிப்பு கூலிக்கு கூட கட்டுப்படியாகாத நிலையில், விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகினர். குண்டு மல்லி பூ விலை சரிவால், பெண்கள் மகிழ்ச்சியுடன் கூடுதலாக பூக்களை வாங்கி சென்றனர்.

**வனப்பகுதியில் காயங்களுடன் இறந்த சிறுத்தை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,01:36 IST

சத்தியமங்கலம்: பவானிசாகர் காட்டில் ஐந்து வயது சிறுத்தை காயங்களுடன் இறந்து கிடந்தது. பவானிசாகர் வனப்பகுதிக்கு உட்பட்ட தெங்குமரஹடா பகுதியில் கருவண்ணராயன் கோவில் பகுதி உள்ளது. பவானிசாகர் வனத்துறையினர் நேற்று இப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, அங்குள்ள காட்டில் ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுத்தை காயங்களுடன் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மண்டல வன பாதுகாவலர் அருண் உத்தரவின் பேரில், மாவட்ட வன அதிகாரி சதிஷ், வனப்பகுதி டாக்டர் மனோகரன் மற்றும் வனத்துறையினர் சம்பவ இடத்துக்கு சென்றனர். அங்கு சிறுத்தையை பரிசோதனை செய்த போது, மற்ற விலங்குகளுடன் சண்டையிட்ட போது, காயம் ஏற்பட்டு சிறுத்தை இறந்திருக்கலாம் என டாக்டர் மனோகரன் தெரிவித்தார். சம்பவ இடத்திலேயே சிறுத்தைக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, சிறுத்தையின் உடல் எரிக்கப்பட்டது.

**ஸ்ரீவை., நெல் கொள்முதல் நிலையம் முடக்கம் :5 ஆயிரம் நெல் மூட்டைகள் வெயில், மழையால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2011,00:23 IST

தூத்துக்குடி : ஸ்ரீவைகுண்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் செய்யப்படாததால் சுமார் 5 ஆயிரம் மூட்டைகள் நெல் வெயில் மற்றும் மழையினால் சேதம் அடைந்து வருகிறது. தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவையின் அமைப்பாளர் நயினார் குலசேகரன் கலெக்டருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது; தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனத்தில் மருதூர் அணை கீழக்கால், மேலக்கால் ஆகியவற்றை சேர்ந்த சுமார் 12 ஆயிரம் ஏக்கர்களில் பிசான சாகுபடி அறுவடை முழுவதும் முடியாமல் இன்னும் பாக்கியுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீவைகுண்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் சுமார் 15 நாட்களாக நெல்கொள்முதல் நடைபெறவில்லை. இதன் காரணமாக விவசாயிகள் கொள்முதல் நிலையத்தில் விற்பனைக்காக கொண்டு வந்த நெல் சுமார் 5 ஆயிரம் மூட்டைகள்

குடோனுக்கு வெளியில் மழைக்கும், வெயிலுக்கும் இடையில் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் தேங்கி கிடக்கிறது. இந்நிலையை பயன்படுத்தி வெளிமார்கெட்டில் கோட்டை நெல் 1200 ரூபாயாக குறைந்துள்ளது.

இதனால் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் மீது சுமார் 300 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே ஸ்ரீவைகுண்டம் அரசு நெல் கொள்முதல் நிலையம் தொடர்ந்து செயல்பட்டு தேங்கி கிடக்கும் நெல்லினையும், மேலும் வரும் நெல்லையும் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

**பழ மரங்களில் மாவுப்பூச்சிதாக்குதல் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,22:27 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் பல பகுதிகளில் உள்ள நெல்லிக்காய், பப்பாளி, மாங்காய் போன்ற மரங்களில் மாவுப்பூச்சி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது.பொதுமக்கள் கூறியதாவது:இந்த ஆண்டு மாவுப்பூச்சி தாக்குதலினால், பல மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் தாக்குதலால் பழுப்பதற்கு முன்னதாகவே பழங்கள் கீழே விழுகின்றன. இதனால், பழங்களின் சுவை குறைகிறது. மாவுப்பூச்சியின் தாக்குதல் மற்ற செடிகளுக்கும் பரவுவதால் பாதிப்புகள் அதிகரித்துள்ளது' என்றனர்.வேளாண்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது,"தற்போது கோடை காலம் என்பதால் அனைத்து பகுதிகளிலும் மாவுப்பூச்சியின் பிரச்னை உள்ளது. மாவுப்பூச்சிக்கு மருந்து தெளிக்க கடந்தாண்டுகளில் மானியத்துடன் மருந்து வினியோகம் செய்யப்பட்டது. இந்தாண்டு இதுவரை அதற்கான அறிவிப்புகள் வரவில்லை.அனைத்து இடங்களுக்கும் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்தை பயன்படுத்த முடியாது. அதற்கு மாற்றாக தமிழ்நாடு வேளாண் பல்கலை மூலம் வினியோகம் செய்யப்படும், இரை விழுங்கும் பூச்சியை வாங்க விவசாயிகள் பயன்படுத்தலாம். மழை காலம் துவங்கி விட்டால், இந்த பூச்சிகளின் தாக்கம் குறைந்துவிடும்' என்றனர்.

**மக்காச்சோளம் விலை "கிடுகிடு' உயர்வு: வரத்து குறைவு எதிரொலி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,22:36 IST

உடுமலை : ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் உள்ளூர் தேவை அதிகரித்துள்ளதால் மக்காச்சோளத்தின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. விவசாயிகள் இருப்பு வைத்து விற்பனை செய்ய ஆர்வம் காட்டுவதால் சந்தைக்கு வரத்து குறைந்துள்ளது. கடந்த ஜூன் மாத பருவத் தில் உடுமலை மற்றும்

சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., மண்டல பாசனத்திற்கு அதிகளவு மக்காச்சோளம் பயிரிடப்பட்டது. செப்., மாத இறுதியில் அறுவடை துவங்கிய போது நூறு கிலோ மூட்டையின் விலை 950 ரூபாயாக இருந்தது. கறிக்கோழி பண்ணைகள் கொள்முதலை துவங்கியது மற்றும் பெரிய வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து இருப்பு வைக்க ஆர்வம் காட்டியது ஆகிய காரணங்களால் விலை ஆயிரம் ரூபாயை தாண்டியது.

வெளிமாநில வரத்து போதிய அளவு இல்லாததால் நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைக்க துவங்கினர். இதனால், சந்தைக்கு வரத்து குறைந்து விலை படிப்படியாக உயர்ந்து வந்தது. இந்நிலையில், சட்டசபை தேர்தல் அறிவிப்பு வெளியானதும் மக்காச்சோள வர்த்தகம் பாதிக்கப்பட்டது. வியாபாரிகள் மொத்தமாக பணத்தை எடுத்து வருவதில் சிக்கல் இருந்ததால் வியாபாரம் மந்தநிலைக்கு சென்றது. தேர்தல் முடிந்துள்ள நிலையில், வர்த்தகம் மீண்டும் சூடுபிடித்துள்ளது. ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் உள்ளூர் தேவை அதிகரித்துள்ளதால் மக்காச்சோளத்தின் விலை ஒரு மாதத்தில் மேலும் உயர்ந்துள்ளது.

நேற்றைய நிலவரப்படி ஒரு மூட்டை மக்காச்சோளத்தின் விலை 1,300 ரூபாயிலிருந்து 1,350 ரூபாய் வரை இருந்தது. கடந்த ஆறு மாதங்களில் அதிகபட்ச விலை தற்போது கிடைத்து வருகிறது. உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சந்திரசேகரன் கூறுகையில், இந்த சீசனில் மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், விவசாயிகள் அதிகளவு இருப்பு வைத்துள்ளனர். உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் 33 ஆயிரம் மூட்டை மக்காச்சோளம் இருப்பு வைக்கப்பட்டு 97 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பொருளீட்டு கடனாக வழங்கப்பட்டுள்ளது. வரத்தும் சீராக உள்ளது என்றார்.

**பழநி அணைகளில் நீர்மட்டம் குறைவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,21:44 IST

பழநி : பழநி அணைகளுக்கு நீர்வரத்து இல்லாத நிலையில் கோடை வெப்பம் காரணமாக நீர்மட்டம் குறைந்து வருகிறது. கொடைக்கானல் மலைப்பகுதியில் போதியளவு மழை இல்லை. இதனால் பழநி அணைகளுக்கான நீர்வரத்து முற்றிலும் பாதித்துள்ளது. அணைகளில் இருந்து விவசாயம், குடிநீர் வசதிக்காக தண்ணீர் வெளியேற்றப்படுவது தொடர்கிறது. மேலும் கோடை வெப்பம் காரணமாக, அணை நீர்மட்டம் வெகுவாக குறை ந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி பாலாறுபொருந்தலாறு அணையில் இருந்து வினாடிக்கு 107 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 38.75 அடி(மொத்த உயரம் 65 அடி)யாக இருந்தது. குதிரையாறு அணையில் இருந்து

வினாடிக்கு 17 கன அடி நீர்வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 48.34 அடி(மொத்த உயரம் 80 அடி)யாகும். வரதமாநதி அணையில் இருந்து வினாடிக்கு 2 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 37.07 அடி(மொத்த உயரம் 67 அடி).

**மாவட்டத்தில் மாங்காய் வரத்து...ஆரம்பம் : கடும் வெயிலால் வரத்து குறையும் நிலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 18,2011,22:07 IST

வத்திராயிருப்பு : மாவட்டத்தில் மாங்காய் வரத்து ஆரம்பித்துள்ளதால் சீசன் களை கட்ட துவங்கியுள்ளது. நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்லும் வெயிலின் தாக்கத்தால் வடுக்கள் உதிர்ந்து வருகின்றன. இதனால் வரத்து குறைந்து சீசன் முன்னதாகவே முடியும் நிலை உள்ளது. ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, தாணிப்பாறை உள்ளிட்ட மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் மா விவசாயம் அதிகளவில் நடந்து வருகிறது.

பஞ்சவர்ணம், சப்பட்டை, கல்லாமை, பனாசா, காசாலட்டு, மற்றும் 20 க்கும் மேற்பட்ட ஒட்டுரக மாங்காய்களும் விளைவிக்கப்படுகின்றன. மாவட்டத்தின் மொத்த மகசூலில் 90 சதவீதத்திற்கு மேல் இங்கிருந்தே விளைகிறது. முன்பருவ காய்கள்: மே மாத துவக்கத்திலிருந்து சீசன் ஆரம்பமாகும். ஜூலை வரை களைகட்டும். ஆனால் இந்த ஆண்டு தாமதமாக பெய்த பருவமழை மா விவசாயத்திற்கு உகந்த சூழலை ஏற்படுத்தியது. தற்போது "முன் பருவ காய்கள்' மகசூலாக ஆரம்பித்துள்ளது. சீசன் துவங்கியுள்ளதால் கேரளா, மதுரை, திருச்சி என பல்வேறு நகரங்களிலிருந்தும் மொத்த வியாபாரிகள், கமிஷன் மண்டி வியாபாரிகள் கொள்முதல் செய்வதற்காக வரத்துவங்கியுள்ளனர்.

தற்போது தரத்திற்கேற்ப கிலோ 15 ரூபாயிலிருந்து 35 ரூபாய் வரை மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. உதிரும் வடுக்கள்: இந்நிலையில் கடந்த 10 நாட்களுக்கு முன் சூறைக் காற்றுடன் திடீர் மழை பெய்ததாலும், வெயிலின் கொடுமை அதிகரித்து வருவதாலும், ஓரளவு வளர்ச்சியடைந்த காய்கள், வடுக்கள் உதிர்ந்து வருகின்றன. கிடைக்கவிருந்த மகசூலில் 30 சதவீதத்திற்கு இழப்பு ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சீசனும் முன்னதாகவே முடிந்துவிடும் நிலை உள்ளது.

தினகரன்

**உப்பு மூட்டை ரூ.70 சரிவு**

பதிவு செய்த நாள் 4/19/2011 1:41:16 AM



மரக்காணம்: மரக்காணம் பகுதியில் மத்திய, மாநில அரசுக்கு சொந்தமாக 35 ஏக்கர் உப்பளங்கள் உள்ளன. உப்பு உற்பத்திக்கு அதிக வெயில் தேவை. இப்போது கோடை என்பதால், உப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. கடந்த 2 மாதத்துக்கு முன்பு 100 கிலோ உப்பு மூட்டை
ரூ.180 முதல் ரூ.195 வரை விற்பனையானது. ஆனால், இப்போது உப்பு உற்பத்தி அதிகரிப்பால் ரூ.110 முதல்
ரூ.130 வரை சரிந்துள்ளது. இது மூட்டைக்கு ரூ.70 குறைவு. மே, ஜுன் மாதங்களில் கோடை வெப்பத்தில் மேலும் உப்பு உற்பத்தி அதிகரிக்கும். தமிழகத்தின் அதிக உப்பு உற்பத்தியாகும் தூத்துக்குடியில் கோடை மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மேட்டூருக்கு நீர்வரத்து குறைந்தது

பதிவு செய்த நாள் 4/19/2011 2:06:48 AM



மேட்டூர் : மேட்டூருக்கு வரும் நீரின் அளவு நேற்று மாலை விநாடிக்கு 1,366 கனஅடியாக குறைந்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்துள்ளதால் அணைக்கு வரும் நீரின் அளவும் குறைந்துள்ளது. நேற்று முன்தினம் மாலை விநாடிக்கு 1,852 கனஅடியாக இருந்த நீர் வரத்து, நேற்று மாலை விநாடிக்கு 1,366 கனஅடியாக குறைந்தது. நாமக்கல், ஈரோடு, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து நேற்று விநாடிக்கு 1,600 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 108.03 அடி.